## அறிமுகம்

# ஆராதிக்க அழைத்தல்

*1993ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில், எனது மனைவி பார்பராவும் நானும், பத்து ஆண்டுகளுக்குப் பின்பு திரும்பவும் ஜாம்பியாவுக்குச் சென்றோம். நாங்கள் நாம்வியாங்கா கிறிஸ்தவ மேல்நிலைப்பள்ளியில் இருந்து ஒரு வாகனத்தைக் கடனாகப் பெற்றுக்கொண்டு, ஞாயிற்றுக்கிழமை காலையில் சியாக்காசசா கிராமத்திற்குப் பயணம் செய்தோம். அந்தக் கிராமத்தில் பத்து ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு சபையை நாட்டுவதில் நாங்கள் உதவியிருந்தோம் மற்றும் அங்கிருந்த கிறிஸ்தவர்கள் ஒரு கட்டிடத்தைக் கட்டிக் கொள்வதிலும் உதவியளித்திருந்தோம். நாங்கள் காலை சுமார் 10:00 மணியளவில் அந்தக் கட்டிடத்தை அடைந்தபோது, பார்வையில் படும்படி ஒருவரும் அங்கிருக்கவில்லை. நாங்கள் ஒரு மரத்தடியில் நின்று கொண்டு, சபையானது இன்னமும் அங்கே கூடிவருகிறதா என்று வியப்புற்றுக்கொண்டிருந்தோம். நாங்கள் நீண்ட நேரம் வியப்படையத் தேவையிருக்கவில்லை. ஒருசில நிமிடங்களுக்குப் பின்பு, ஒரு பையன் தோன்றி மரத்தை நோக்கி வேகமாக ஓடிவந்து, அதில் தொங்கிய ஒரு பழைய வட்டுக் கலப்பைத் தகட்டை உலோகக் கம்பியொன்றினால் அடிக்கத் தொடங்கினான். அது "ஆராதனைக்கான அழைப்பாக," கிராமத்தின் உறுப்பினர்கள் அந்தநாளின் ஆராதனையில் விருந்தினர்களைக் கொண்டிருந்தனர் என்று தகவல் அளிப்பதாக இருந்தது.*

*யாரேனும் ஒருவர் வருவதற்கு முன்பு ஒரு அரைமணி நேரம் கடந்து சென்றது. ஒவ்வொருவராக, அவர்கள் பல்வேறு திசைகளில் இருந்து, புதர்களுக்குள் இருந்து வெளிப்பட்டனர். அவர்கள் எங்களை மகிழ்வுடன் வாழ்த்தி ஏறக்குறைய அவர்கள் ஒவ்வொருவரும் வந்துவிட்டனர் என்பதை உறுதிப்படுத்தும் வரையில் அந்த மரத்தின் அடியில் எங்களுடன் பேசிக்கொண்டிருந்தனர். கட்டிடத்தின் உட்புறத்தில், ஆண்கள் ஒருபுறமும் பெண்கள் மறுபுறமும் அமர்ந்தனர். மண்தரையில் பதிக்கப்பட்டிருந்த "Y"-வடிவத் தாங்குகால்கள் இருமுனையிலும் பொருத்தப்பட்டிருந்த மரப்பலகைகளே இருக்கைகளாக இருந்தன.*

*சில பாடல்கள் எங்களுக்குப் பழக்கமான மெட்டுக்களைக் கொண்டிருந்தன, ஆனால் அவைகள் டோங்கா மொழியில் பாடப்பட்டன. சில பாடல்கள் முற்றிலும் பழக்கமற்றவைகளாயிருந்தன, அவைகள் தனிப்பட்ட ஆப்பிரிக்க இராகங்களைக் கொண்டிருந்தன. அது ஆப்பிரிக்க நாட்டிற்கான தனிப்பட்ட வகையிலான ஆராதனை அனுபவமாக இருந்தது. இது எனக்குப் பழக்கமான வகையிலான ஆராதனையாக இருக்கவில்லை, ஆனால் ஆராதனை நடந்து கொண்டிருந்தது என்பது பற்றி என் மனதில் சந்தேகம் எதுவும் இருக்கவில்லை.*

இன்னொரு சந்தர்ப்பத்தில், இந்தியாவின், சென்னையில் உள்ள YMCA மண்டபத்தில் கூடிவந்த சபையில் பேசுவதற்காக, நான் சகோதரர் பீட்டர் சாலொமோனுடன் சென்றேன். நாங்கள் அங்கே சென்று சேர்ந்தபோது, ஆராதனை ஏற்கனவே தொடங்கி நடந்துகொண்டிருந்தது. அங்கு பென்ச்சுகள் அல்லது நாற்காலிகள் போடப்பட்டிருக்கவில்லை. ஆராதனை செய்பவர்கள் தரையில் விரிக்கப்பட்டிருந்த பாய்களின்மீது அமர்ந்தோ அல்லது முழங்காற்படியிட்டோ இருந்தனர். நாங்கள் உள்ளே நுழைந்தபோது, பெரும்பான்மையான மக்கள் தலைகளைத் தாழ்த்தி முழங்காற்படியிட்டு இருந்தனர். யாரோ ஒருவர் ஜெபத்தில் வழிநடத்திக் கொண்டிருந்தார். பீட்டர் அந்த மண்டபத்தின் கதவைத் கடந்தவுடனே, தமது இருமுழங்கால்களிலும் முழங்காற்படியிட்டார். நானும் அதையே செய்தேன். தேவனுடைய அரியணைக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தி யிருந்த ஒரு சபையின் காட்சி மனதில் எழுச்சி ஏற்படுத்துவதாக இருந்தது. ஆராதனை நடந்துகொண்டிருந்தது என்பது எனக்குத் தெளிவாய்த் தெரிந்தது.

ஐந்து வேறுபட்ட ஆப்பிரிக்க நாடுகளிலும், இந்தியாவின் பல்வேறு மாறுபட்ட பகுதிகளிலும், தென் அமெரிக்காவின் இரு நாடுகளிலும், மத்திய அமெரிக்காவின் நாடுகளிலும், கரீபியன் பகுதியில் உள்ள பல தீவுகளிலும், நான் ஆராதனைக் கூட்டங்களில் கலந்துகொண்டுள்ளேன். இவை யாவும் (வேதவசனங்களின் எல்லைகளுக்குள்) வெவ்வேறு வகைப்பட்டவையாக உள்ளன, இருப்பினும் இவையாவும் ஒரேமாதிரியாகவே உள்ளன. ஆராதனைக் கூட்டங்கள் பற்றிய எனது எதிர்பார்ப்புகளில் நான் நெகிழ்வுடன் இருக்கக் கற்றுக்கொண்டிருக்கின்றேன். சில ஆராதனைகள் அதிகம் மகிழ்வுடன் அனுபவிக்கக் கூடியதாகவும் மற்ற ஆராதனைகளைவிட அதிகம் தனிப்பட்ட பலன் கொண்டிருந்ததாகவும் இருந்திருப்பனும், நான் ஆராதிக்கிறேனா இல்லையா என்பது ஆராதனை செய்யும் இடத்தில் நடந்துகொண்டிருப்பதைவிட அதிகமாக எனக்குள் நடந்துகொண்டிருப் பதைச் சார்ந்துள்ளது என்று கற்றிருக்கின்றேன்.

## ஆராதனை என்றால் என்ன?

ஆராதனை என்பது சபையார் ஈடுபட்டுச் செய்யும் பல்வேறு செயல் பாடுகளில் எங்காவது புதைபட்டுக் கிடக்கிறதா? அது கண்டுபிடிக்கப் படுவதற்காக நமது ஆராதனை இடங்களின் மூலையொன்றில், பதுங்கிக் காத்திருக்கிறதா? ஆராதனை பற்றிய எனது தொடக்ககால நினைவு "சபைக்குச் செல்லுதல்" என்பதாக இருந்தது. நாம் "சபைக்குச் செல்வ தில்லை," ஆனால் "ஆராதிக்கச் செல்கின்றோம்" என்று பிரசங்கியார்கள் அடிக்கடி புத்திகூறியபோதிலும், அந்த உள்ளுணர்வு எனது மூளையில் பதியப்பட்டு இருந்தது. ஆராதனை என்பது உண்மையில் "நாம் செல்ல" வேண்டிய விஷயமாக உள்ளது என்று நாம் யூகிக்க வேண்டுமென்றால், அது என்ன என்பதைக் கண்டறிவது நமக்கு அவசியமானதாக உள்ளது. A. W. டோசேர் என்பவர், "ஆராதனை என்று அழைக்கப்படுவதில் அதிகமானவை ஆராதனையாக இருப்பது இல்லை" என்று கூறினார்.[1]

‘‘அன்பு,’’ என்பதைப் போன்று, ‘‘ஆராதனை,’’ என்பதும், நன்கு பழக்கமான ஒரு வார்த்தையாகவும், இன்றைய நாட்களில் மக்கள் முற்றிலும் புரிந்துகொள்ளும்படியான சொற்றொடர்களில் விளக்கக் கடினமானதாகவும் உள்ளது. அது சிலரால் விரும்பப்படுகிற மற்றும் சிலரால் வெறுக்கப்படுகிறதாகும். சிலர் தேவனுடைய பிரசன்னத்தில் இருக்கும் புத்துணர்வூட்டுகிற, திருப்திப்படுத்துகிற, ஆத்துமாவைத்-தூண்டுகிற அனுபவத்தைப் பெற ஏங்குகின்றனர். மற்றவர்களோ ஆராதனை என்பது தங்கள் நேரத்தை செலவழிப்பதில் கற்பனை செய்யப்படுவதிலேயே மிகவும் சலிப்பான வழியென்று நினைக்கின்றனர்.

ஆல்ஃபிரெட் P. கிப்ஸ் என்பவர், “இதன் அர்த்தம் ... ரோஜாவின் நுட்பமான நறுமணம், அல்லது தேனின் மகிழ்ச்சிதரும் ருசி போன்றதாக, விவரித்தலைக் காட்டிலும் அனுபவித்தல் சுலபமானதாக உள்ளது’’ என்று கூறினார்.[2] கிப்ஸ் இந்தக் கூற்றில் சரியானவராக இருந்தாலும், ஆராதனைக்கான வேதாகமரீதியான விளக்கம் ஒன்றை நாடுதல் என்பது நமக்கு இன்னமும் முக்கியமானதாகவே உள்ளது. இல்லையென்றால், நாம் ஆராதனையாக அனுபவிக்கும் விஷயம் என்ன என்று அறிய இயலாது. மேற்கண்டதைக் கூறிய பின்பு, கிப்ஸ் என்பவர் பல்வேறு ஆதாரமூலங்களில் இருந்து சேகரித்த பல விளக்கங்களைக் கொடுத்தார். “ஆராதனை” என்பதற்கு அவர் தந்த விளக்கங்களில் சில பின்வருமாறு (1) “தெய்வீக ஆதரவு என்ற உணர்வின்கீழ், நன்றிப்பெருக்கெடுத்தோடும் இருதயம்”; (2) “தேவனுடைய பிரசன்னத்தில் இளைப்பாறியிருக்கும் ஆத்துமா தன்னை ஊற்றுதல்”; (3) “இருதயம் தனது தேவைகள், அல்லது தான் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களினிமித்தம்கூட அல்ல, தேவனுடனே செய்யும் பணி”; (4) “பிதாவானவர் கொடுக்கிறவராகவும், குமாரன் மீட்பராகவும், பரிசுத்த ஆவியானவர் உள்ளாக வாசம்பண்ணும் விருந்தினராகவும்[3] இருக்கின்றனர் என்பதை அறிந்த ஆத்துமா மேலே எழும்புதல்.”

ரிக் ஆட்ச்லீ என்பவர் ஆராதனையை ‘‘தேவன் யாராக இருக்கிறார் என்பதை உணர்ந்தறிந்து, நீங்கள் யாராக இருக்கிறீர்கள் என்பதை உணர்ந்தறிந்து, அதற்கேற்ற வகையில் பதில்செயல் செய்தல்’’ என்று விளக்கப்படுத்தியிருக்கிறார்.[4] ஆராதனை தேவனுடைய மதிப்பையும் மனிதனுடைய நலிவுத்தன்மையையும் உறுதிப்படுத்துகிறது. அது நமக்கு தேவன்மீது நாம் சார்ந்திருக்க வேண்டியதை நினைவுபடுத்துகிறது. இந்த விளக்கங்கள் யாவும், ஆராதனை என்றால் எப்படியிருக்க வேண்டும் என்ற நமது புரிந்துகொள்ளுதலுக்குப் பங்களிக்கையில், இவற்றில் எதுவும் ஆராதனையை முற்றிலுமாக விளக்கமுடிவதில்லை. இந்த இடத்தில் நான் வேறு விளக்கம் எதையும் தருவதற்கு முயற்சிசெய்ய மாட்டேன். இந்தப் பாடத்தொடரில் நாம் படிப்படியாகப் பாடங்களுக்குள் செல்லுகிற போது, ஆராதனையின் அர்த்தம் பற்றி முழுமையும் தெளிவான விஷயம் வளரும். பின்வரும் பாடங்கள் ஒன்றில் ‘‘ஆராதனை’’ என்ற வார்த்தை மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தைகளுக்குரிய அர்த்தத்தைக் கண்ணோக்குவோம்.

## நாம் ஏன் ஆராதிக்க வேண்டும்?

*நாம் ஆராதிக்கும்போது மிகவும் பலவீனமாக இருக்கிறோம், ஏனென்றால் அந்த வேளையில் நாம் நமது மனித நலிவுத்தன்மையைப் பற்றி அதிகமாய் அறிகிறோம்; இருப்பினும் நாம் ஆராதிக்கும்போது மிகவும் பலம்வாய்ந்தவர்களாக இருக்கிறோம், ஏனென்றால் அந்த வேளையில் நாம் ராஜரீகமான தேவனிடத்தில் இருந்து பலத்தைத் தரவழைத்துக் கொள்கிறோம். தேவனே ஆராதிக்கும்படி நம்மை அழைக்கிறவராக இருக்கிறார். அவர் அவ்வாறே நம்மை வடிவமைத்துள்ளார். ஆராதனை யில்லையென்றால் நாம் வெறுமையாக நிறைவற்றதன்மையுடன் இருக்கும் வகையிலேயே மக்கள் வடிவமைக்கப்பட்டு இருக்கின்றனர். நாம் தேவனை ஆராதிக்கவில்லையென்றால், ஆராதிப்பதற்கு வேறு எதையேனும் நாடுவோம் என்பதைத் தேவன் அறிந்திருக்கிறார். அவர் நம்மைத் தமது சொந்த சாயலில், அவரது இயல்பினுடைய விரிவாக்கமாகப் படைத்தார் (ஆதியாகமம் 1:26; 2:7ஐக் காணவும்). அவர் நம்மை இங்கு என்றென்றும் நிலைத்திருக்கும்படி படைக்கவில்லை. நாம் அவருடன் நித்தியத்திற்கும் வாழும்படியாகவே நம்மை அவர் வடிவமைத்துள்ளார். ஆகையால், அவர் நம்மைத் தமது பிரசன்னத்திற்குள் தரவழைக்க, அவரை நன்கு அறிந்து அவரைப் போற்றிப்புகழ வேண்டும் என்று விரும்புகிறார். மக்கள் யாரை அல்லது எதை ஆராதிக்கிறார்களோ அதை/அவரைப்போலவே அதிகமாய் மாறுவார்கள் என்பதை அவர் அறிந்திருக்கிறார். நாம் அவரை ஆராதித்தால், அவரைப்போன்றே அதிகமாய் மாற்றம்பெறுவோம். இந்த சத்தியத்தைப் பின்வரும் வசனப்பகுதிகள் வலியுறுத்துகின்றன:*

> *மேலும் மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல, வானவருடைய சாயலையும் அணிந்துகொள்வோம் (1 கொரிந்தியர் 15:49).*

> *நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமை யடைந்து மறுரூபப்படுகிறோம் (2 கொரிந்தியர் 3:18).*

> *பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளா யிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம் (1 யோவான் 3:2).*

*பொதுவாகக் கூறுவதென்றால், தேவனுடன் மனிதகுலத்திற்குள்ள உறவைத் தேவன் மீளக்கட்டி எழுப்ப விரும்புகிறார். நாம் ஆராதிப்பவர் களானால், நம்மால் பொய்யுரைக்க, ஏமாற்ற, களவுசெய்ய, மற்றும் ஒழுக்கமற்று வாழ இயலாது என்பதை அவர் அறிந்திருக்கிறார். சிலுவையில் தேவன் செய்துள்ளவற்றின்மீது நாம் கொண்டுள்ள விசுவாசத்தின்மூலம்,*

தேவன் நம்மைச் சுத்திகரிக்கவும் தம்முடன் மறுபடியும் இணைத்துக் கொள்ளவும் நாடுகிறார். அவர் ஆராதனையின்மூலம் நம்மைச் சுத்திகரித்துக் காத்துக்கொள்ள நாடுகிறார். மேலும் அவர் ஆராதனையின்மூலம் நாம் அவருடன் நமது உறவைப் பராமரித்தால், அந்த உறவின் சந்தோஷங்களையும் பயன்களையும் நம்மைச் சுற்றியுள்ள உலகத்தில் பகிர்ந்து கொள்வோம் என்பதையும் அவர் அறிந்திருக்கிறார். ஆகையால், ஆராதனை என்பது, அவரது ஆதாயத்திற்கானதாக அல்ல, ஆனால் நமது ஆதாயத்திற்கானதாகவே உள்ளது.

ஆராதனை என்பது தேவனைப் பற்றிய ஒரு கருத்தை அல்லது அவரது இயல்பின் தன்மையைக் கொண்டாடுவதாக மாத்திரமல்ல, ஆனால் தேவனுடைய பிரசன்னத்திற்குள்ளேயே நம்மை நாம் தரவழைத்துக்கொள்ளுதலாயிருக்கிறது. அவரை ஆராதித்தல் என்பது அவருக்குள் மூழ்குதலாகவும், அவரது கூடாரத்தின் வசதியையும் பாதுகாப்பையும் அனுபவித்தலாகவும், அவரது மூடுதலின் வெதுவெதுப்பை உணருதலாகவும் இருக்கிறது. அவரது மகிமையின் வெளிச்சத்தில் குளிர்காய்ந்து, அவரது பிரசன்னத்தின் கதிரொளியை ஈர்த்துக்கொள்ளுதல் என்பது, நாம் இன்னும் அதிகமாய் அவரைப்போலாவதை விளைவிக்கிறது. இது அவர் மீண்டும் வரும்போது அவரது நித்திய பிரசன்னத்திற்கு நம்மை ஆயத்தம் செய்ய உதவுகிறது. மக்கள் யாருடன் தங்கள் நேரத்தைச் செலவிடுகின்றனரோ அவரைப் போலவே ஆகக்கூடிய நிலையில் உள்ளனர். ஆராதனை என்பதை எளிமையாகக் கூறுவதென்றால், இன்னும் அதிகமாக தேவனைப்போல ஆகும் நோக்கத்திற்காக அவருடன் செலவிடுதலாக உள்ளது. நாம் அவர் யாராக இருக்கிறார் என்பதை உணர்ந்தறியும்போது, அவர் தகுதியுள்ளவர் என்ற காரணத்தால் நாம் அவரைக் கனப்படுத்தி துதிப்போம். “தேவனை ஆராதித்து மகிமைப்படுத்துதல் என்பதே - எந்த ஒரு ஆண் மற்றும் பெண்ணின் முதன்மை நோக்கமாயிருக்கிறது.”[5]

## நாம் எப்போது ஆராதிக்க வேண்டும்?

ஆராதனை என்பது, கிறிஸ்தவர்களின் பொதுவான கூடுகைகளைவிட அதிகம் அடிக்கடி இருக்க வேண்டும் என்பதே மிக உயர்வானதாகும். வேதவசனங்களில் ஆராதனை பற்றிக் காணப்படும் பெரும்பான்மையான அறிவுறுத்துதல்களும் உதாரணங்களும், தனிப்பட்ட அல்லது குடும்ப வகையிலான சந்தர்ப்பப்பொருளிலேயே உள்ளன. இருப்பினும், தனிப்பட்ட அல்லது குடும்ப ஆராதனை பற்றிய கேள்விகளை நான் அடிக்கடி கேள்விப்படுவதில்லை. அது தனிப்பட்ட அல்லது குடும்ப ஆராதனை என்பது அதிகமாய் நடப்பதில்லை என்று அர்த்தப்பட முடியுமா?

நாம் “ஆராதனை” என்று நினைக்கும்போது, வழக்கமாக கிறிஸ்தவர்களின் பொதுவான கூடுகையைப் பற்றியே நினைக்கிறோம். இருப்பினும், நாம் தனிப்பட்ட முறையில் தேவனை ஆராதிப்பதில்லை என்றால், நாம் அவரை ஞாயிற்றுக்கிழமைகளில் ஆராதிக்க நம்மை ஆவிக்குரிய வகையில் தகுதிப்படுத்திக் கொண்டவர்களாய் இருக்க மாட்டோம். (“வாரத்தின்

முதல்நாளில்''), இது சிலவேளைகளில் ''கர்த்தருடைய நாள்'' என்று குறிப்பிடப்படுகிறது. (நடபடிகள் 20:7; 1 கொரிந்தியர் 16:2; வெளிப் படுத்தின விசேஷம் 1:10 ஆகிய வசனங்களைக் காணவும்.)[6]

## நாம் எவ்வாறு ஆராதிக்க வேண்டும்?

எவ்வாறு ஆராதிப்பது என்பது பற்றி தொடக்ககால சபையில் ஒரு சில குறிப்புகளும் சில முன் வைத்தல்களும் செயல்படுத்தப்பட்டிருப் பினும், கொரிந்துவில் இருந்தவர்களின் சபைகூடுகைளில் ஆளுமை செய்வதற்காகப் பவுலினால் சில பொதுவான கொள்கைகள், 1 கொரிந்தியர் 11-14ல் வைக்கப்பட்டன. வேதவசனங்களைப்படிக்கும் மாணவர்களில் பலர், 1 கொரிந்தியர் 11-14 முழுவதும் சபைகூடுகையை மனதில் வைத்தே எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று கருதுகின்றனர். இந்த நான்கு அதிகாரங்களிலும் சபைகூடுகையே சந்தர்ப்பப்பொருளாக உள்ளது என்று நான் தனிப்பட்டவகையில் நம்புகிறேன். சில மக்கள் 1 கொரிந்தியர் 11ன் முதல் பதினாறு வசனங்கள் ஆராதனை கூடுகையில் நடக்கவேண்டிய வகையைப் பற்றிப் பேசுகிறதா இல்லையா என்பது பற்றிக் கேள்வியெழுப்புகின்றனர். இருப்பினும், 11:17ல் இருந்து அவ்விதமான கேள்வியெதுவும் இருப்பதில்லை. "கூடிவரும்போது" என்ற சொற்றொடர் இதன் சந்தர்ப்பப்பொருளைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது. இந்தக் கிறிஸ்தவர்கள் ஆராதனையில் என்ன செய்திருப்பினும் - மற்றும் நாம் ஆராதனையில் என்ன செய்திருப்பினும் - இந்தக்கொள்கைகள் அவற்றிற்கு நடைமுறைப்படுவதாக இருக்கும்.

**என்ன செய்ய வேண்டும்**

1. நாம் ஒருவர் பிறருடைய பயனுக்காக ஒன்றுகூடிவர வேண்டும் (11:17). அடுத்த வசனங்கள் அவர்களின் சபைகூடுதல்களைச் சீரழித்துக் கொண்டிருந்த மார்க்கபேதங்கள் மற்றும் பிரிவினைகளைப் பற்றி விவரிக்கின்றன. அவர்கள் தங்கள் சபைகூடுகைகளில் செய்த விஷயங்களில் பெரும்பான்மையானவைகள், அவர்களின் ஆவிக்குரிய வளர்ச்சியை அழிக்கக் கூடியதாக இருந்தன. அவர்கள் தேவனைக் கனப்படுத்துவதற்குப் பதிலாக, தங்களையே கனப்படுத்திக் கொண்டிருந்தனர். அவர்களின் நடவடிக்கைகள் சுயத்தை-நோக்கியிருந்ததற்கு மாறாக தேவனை-நோக்கி யிருக்க வேண்டியது அவசியமாயிருந்தது.

2. நாம் நமது சிந்தையில் நோக்கத்தைக் காக்க வேண்டும் (11:27-29). கர்த்தருடைய பந்தியில் பங்கேற்றல் என்பதே இந்தக் கொள்கையின் சந்தர்ப்பப்பொருளாக உள்ளது. "அபாத்திரமாய்'' (வசனம் 27) என்ற சொற்றொடர் "தவறான நோக்கத்திற்காக தவறான ஆவிக்குள்'' என்று அர்த்தப்படுவது தெளிவு. கொரிந்து நகரில், சபைகூடுதலின் நோக்கம், குறிப்பாக கர்த்தருடைய பந்தியின் நோக்கம் இழக்கப்பட்டிருந்தது. இந்தக் கிறிஸ்தவர்கள் தங்களையே சோதித்துப்பார்க்கும்படியும் (வசனம் 28) அவர்கள் கூடிவந்ததற்கு உண்மையான நோக்கம் என்ன என்பதை உணர்ந்தறியும்படியும் பவுல் வற்புறுத்தினார்.

*3. நாம் ஒரே சரீரமாகச் செயல்பட வேண்டியவர்களாக இருக்கிறோம் (12:12-21). தேவன் தமது மக்கள் ஆராதிப்பதற்காக ஒன்றுகூடி வேண்டும் என்று விரும்புகிறார் (எபிரெயர் 10:25). ஆராதனை என்பது மேல்நோக்கியும் பக்கவாட்டில் கவனம் செலுத்துவதாகவும் இருக்க வேண்டும். அதாவது, ஆராதனை என்பது தேவனுடன் மாத்திரமல்ல, ஆனால் ஆராதிக்கும் ஒருவர் மற்றவருடனும் உறவுகளைக் கட்டி எழுப்ப வேண்டும். தனிப்பட்ட அல்லது குடும்ப ஆராதனை என்பது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானதாக இருக்கிறது, ஆனால் மக்கள் ஒன்றுகூடி ஆராதித்தல் என்பது தனிப்பட்ட அல்லது குடும்ப ஆராதனை அளிக்காத சில விஷயங்களை அளிக்கிறது. விசுவாசத்தைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சியில் இணைவான பங்கேற்பு, ஐக்கியத்தின் கருத்துணர்வையும் பரஸ்பரம் ஊக்கமூட்டுதலையும் பேணி வளர்க்கிறது. கூடிவரும் சபைக் குள்ளேயே பிரிவினைகள் நிலவினால் இது இழந்துபோகப்படுகிறது. ஒருசிலர் சில முன்னுரிமைகளையும் மற்றவர்கள் வேறுசில முன்னுரிமை களையும் கொண்டிருக்கும்போது, பக்கவாட்டில் உள்ள உறவுமுறைகள் துன்புறுகின்றன. நமது பக்கவாட்டிலான உறவுமுறைகள் துன்புறும்போது, மேல்நோக்கிய நமது உறவுமுறைகளும் (தேவனுடனான நமது உறவுமுறையும்) அவ்வாறே துன்புறுகிறது என்பதை நாம் பெரும்பாலும் உணர்ந்தறிவதில்லை.*

*4. குறைவான கனம் பெற்ற உறுப்பினர்களுக்குக் கனம் கொடுத்து, நாம் ஒருவர் மற்றவர்மீது அக்கறையுடன் இருக்க வேண்டும் (12:22-25; யாக்கோபு 2:1-13ஐ ஒப்பிடவும்). சரீரத்தில் நம்மைப் போலிராத உறுப்பினர்களைக் கண்டுகொள்ளாதிருக்கவோ அல்லது தவிர்க்கவோ நாம் சோதிக்கப்படலாம். செல்வந்தர்களிடத்தில் பட்சபாதம் காண்பிக்கும் பிரச்சனையைப் பற்றி யாக்கோபு குறிப்பாகப் பேசினார். தேவனு டைய மக்கள் யாவரும் சமானமாயிருக்கும் இடத்தில் தேவனுடைய பிரசன்னத்தில் சபைகூடுதல் ஒரு பாதுகாப்பான புகலிடமாக உள்ளது. ஏழைகளையும், குறைவாக விரும்பத்தக்கவர்களையும், அல்லது வெளியே தள்ளப்பட்டிருப்பவர்களையும் இந்த உலகம் நடத்துவதுபோல் சபை நடத்துவதில்லை. சபைகூடுகை என்பது வெளியே தள்ளப்பட்டவர்கள், கீழ்நிலையில் உள்ளவர்கள், மற்றும் கொடூரமான சமுதாயத்தினால் தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளவர்கள் ஆகியோருக்கு ஓய்விடமாக உள்ளது. சபைகூடுகைக்குள் வருதல் என்பது சுத்தமான காற்றை சுவாசிக்கப்பெறுதல் போலிருக்க வேண்டும். அங்கு, நாம் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் அக்கறையும் சமமான கனமும் காணவேண்டும்.*

*5. நாம் ஒருவர் மற்றவரை அன்புடன் நடத்தவேண்டும் (13:1-8). இவ்வசனப்பகுதி பற்றியும் இவை ஆராதனையைப்பற்றிப் போதிப்ப தென்ன என்பதைப் பற்றியும் எனது நண்பர் ஒருவரும் நானும் கலந்துரையாடும் வரையில், அதிகாரம் 13ல் உள்ள அன்பு பற்றிய ஆய்வுப்பொருள், ஆராதனை பற்றிய அறிவுறுத்தலின் மத்தியில் மிகச்சரியாக வருகிறது என்பதை நான் ஒருக்காலும் கவனித்திருக்கவில்லை.[7] கேள்வி எதற்கும் இடமின்றி, இந்தப்போதனை பிற பகுதிகளிலும் நடைமுறைப்*

பயன்பாட்டைக் கொண்டுள்ளது; ஆனால் ஒன்றிணைந்த ஆராதனையில் ஒருவர் மற்றவரை எவ்வாறு நடத்துதல் என்பதே இதன் குறிப்பான சந்தர்ப்பப்பொருளாக உள்ளது. அன்பு என்பது இந்தக் கிறிஸ்தவர்களின் முதன்மையான நாடுதலாக இருக்கவேண்டியதாயிற்று (14:1). அன்பு நம்மை முதலில் பிறருடைய தேவைகள் மற்றும் முன்னுரிமைகளைக் கவனிக்கும்படி வழிநடத்துகிறது. நான் 13ம் அதிகாரத்தை, ஆராதனைக்குக் கூடுகையில் கிறிஸ்தவர்களின் நடக்கைக்கு நடைமுறைப்பயன்பாடு என்ற கருத்துடன் வாசிக்கையில், அந்த முழு அதிகாரமுமே என்னை ஒரு புது அர்த்தத்திற்குள் எடுத்துச் செல்கிறது.

6. நாம் ஒருவர் மற்றவரைப் பக்திவிருத்தியூட்டுதல் என்பதை நாட வேண்டும் (14:3, 4, 5, 12, 17, 26, 31). அதிகாரம் 14ல் “பக்திவிருத்தியூட்டுதல்” என்பது அதன் பல்வேறு வடிவங்களில் திறவுகோல் வார்த்தையாக உள்ளது. வேதாகமப்பதிப்பு பயன்படுத்துவதைச் சார்ந்து, குறைந்தது ஏழுமுறைகள், ஆராதனை என்பது பக்திவிருத்தியூட்டுதலாக இருக்க வேண்டிய அவசியத்தைப் பவுல் வலியுறுத்துதலை நாம் காணுகிறோம். “பக்திவிருத்தியூட்ட” என்பது “கட்டியெழுப்ப” என்று அர்த்தப்படுவதாக உள்ளது. பக்திவிருத்தியூட்டுதல் என்பது இதற்கு முன்பு கூறப்பட்ட ஐந்து கொள்கைகளின் தொகுப்புமுடிவாக இருக்க வேண்டும். சாத்தானும் இந்த உலகமும் இடித்துப்போட முயற்சிப்பதை, திரும்பவும் கட்டியெழுப்புவதாக ஆராதனை உள்ளது. ஆராதனை என்பது சபைக்கு ஒரு சுமையாக அல்ல, ஆனால் சபையைக் கட்டி எழுப்புவதாக இருக்க வேண்டும்.

7. நாம் சகலத்தையும் ஒழுங்கும் கிரமமுமாக செய்ய வேண்டும் (14:40). தேவன் குழப்பத்தை உருவாக்கவோ அல்லது அங்கீகரிப்பதோ இல்லை. ஆராதனை கூடுகையில் ஏற்படும் எந்த குழப்பமும் மனிதனாலேயே உருவாக்கப்படுகிறது. குழப்பத்தை உருவாக்கும் ஆவி எதுவும் சபை கூடுகையில் இயங்குகிறதென்றால், அது நிச்சயமாகப் பரிசுத்த ஆவியானவர் அல்ல.

**எதைச் செய்யக்கூடாது**

சபைகூடுகையில் சரியானபடி இயங்கி, சரியான வார்த்தைகளைக் கூறி, சரியான பாடல்களைப் பாடி இருக்கும்போதும், ஆராதனையைத் தவறவிடக்கூடாது என்பது சபைகூடிவருதலில் நமது மாபெரும் அக்கறைகளில் ஒன்றாக இருக்க வேண்டும். இது பின்வரும் பல காரணங்களினால் நடக்கக் கூடும்:

முதலாவது, நாம் சபைகூடுகைக்கான தவறான நோக்கத்துடன் ஆராதிக்க முடியாது. மத்தேயு 15:8ல் ஏசாயா 29:13ஐ மேற்கோள் காண்பித்ததன்மூலம் இயேசு இதைப்பற்றி எச்சரித்தார்: “இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது.”

இரண்டாவது, நாம் நமது வாழ்வில் உள்ள பாவங்களினிமித்தம்

ஆராதிப்பவர்களாக இருக்க முடியாது. ஆராதனையை ஏற்றுக்கொள்ளப் படக் கூடாததாக்கும் ஒரு சூழ்நிலையைப் பற்றி ஆமோஸ் தீர்க்கதரிசி விவரித்தார். அவரது காலத்தில் இருந்த மக்கள் பண்டிகை நாட்களை ஆசரித்தனர், தகன பலிகளைச் செலுத்தினர், மற்றும் ஆவிக்குரிய பாடல் களைப் பாடினர்; ஆனால் அவர்களின் மோசமான வாழ்க்கையினிமித்தம் தேவன் அவர்களின் ஆராதனையை ஏற்றுக்கொள்ளாதிருந்தார் (ஆமோஸ் 5:21-27).

மூன்றாவது, நாம் ஒரு சகோதரருக்கு மனம்புண்படும் சிலவற்றைச் செய்திருப்பதால் ஆராதிப்பவர்களாக இருக்க முடியாது. இயேசு, “ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவு கூருவாயாகில், அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து” என்று கூறினார் (மத்தேயு 5:23, 24).

ஹார்டிங் பல்கலைக் கழகத்தில் பல ஆண்டுகளாக, “சபையின் ஆராதனை” என்ற பாடத்தை நடத்திய, மறைந்த ஆன்டி T. ரிட்சி Jr., என்பவர் “அன்றாட வாழ்வானது தேவனுடன் இசைந்திராதபோது, ஆராதனை என்பது அவருக்கு ஏற்புடையதாக இருக்க முடியாது” என்று கூறினார்.[8] நாம் வாழும் வழியை மாற்றுவதற்கென்று தேவன் ஆராதனையைத் திருநிலைப்படுத்தியுள்ளார். ஆராதனையானது நமக்குள் நம்மை உருவாக்கி தேவனுடைய சாயலாக்கும் வாழ்வின் பண்புகளை மேம்படுத்துகிறது. தேவனுக்குத் தேவை என்பதால் அவர் ஆராதிக்கும்படி நம்மை அழைப்பதில்லை. அவர் ராஜரீகமானவராக, தமக்குள்ளே முழுநிறைவானவராக இருக்கிறார். நாம் அவருக்கு ஏதொன்றையும் அளிக்கத்தேவை இல்லை. நமக்குத் தேவை என்பதாலேயே நாம் ஆராதிக்கும்படி அவர் அழைக்கிறார். ஆராதனையில், அவர் நம்மை ஆவிக்குரிய மாபெருந்தன்மைக்கு அழைக்கிறார்.

## முடிவுரை

ஆராதனையைப் பற்றி மக்கள் எழுப்பியுள்ள பல்வேறு பிரச்சனைகளில் சிக்கிக்கொண்டிருத்தல் என்பது எனது நோக்கமல்ல. ஆராதனையின் இருதயம் போன்ற மையப்பகுதி மற்றும் இன்றியமை யாத பகுதி ஆகியவற்றின்மீது நாம் கவனம் குவிக்கும்போது, இவைகள் அனைத்தும் இல்லையென்றாலும், இவற்றில் பெரும்பான்மையானவைகள் மறைந்து போகும். ஆராதனை என்பது வடிவமைப்பு அல்லது பாணியைப் பற்றியதல்ல. அது நான் எதை விரும்புகிறேன் அல்லது தேர்ந்துகொள்கி றேன் என்பதைப் பற்றியதல்ல, ஆனால் எது தேவனைப் பிரியப்படுத்துகிறது என்பதைப் பற்றியதாகும். ஆராதனைக்குக் கூடுதல் என்பது நாம் ஒவ்வொருவரும் நமது தனித்திறமையைச் செயல்படுத்துவதற்கான வழியாக இருப்பதில்லை, ஆனால் அது நம் ஒவ்வொருவரையும் தேவனு டைய பிரசன்னத்திற்குள் தரவழைப்பதாக உள்ளது. ஆராதனை என்பது “சபையற்றவர்கள்” என்பதுடன் தொடர்புபடுத்தப்படுவதாகக்கூட

இருப்பது இல்லை. புதிய ஏற்பாட்டு ஆராதனை என்பது கிறிஸ்தவர்களுக்கான நடவடிக்கையாக உள்ளது. அது நாம் நமது சபைகூடுகைகளில் உள்ள விருந்தினர்கள்/பார்வையாளர்கள் பற்றி நாம் உணர்வற்றவர்களாக இருக்க வேண்டும் என்று அர்த்தப்படுவதில்லை; இருப்பினும், தேவனுடன் அல்லது ஆராதனையின் உண்மையான நோக்கத்துடன் இசைவிக்கப்பட்டிராத ஒரு விருந்தினர், வாழ்வில் தாம் இருக்கும் இடத்திற்கு ஆராதனை செய்துள்ள ஒவ்வொன்றையும் காணமாட்டார் என்பதை நாம் உணர்ந்தறிய வேண்டும்.

---

குறிப்புகள்

[1]A. W. Tozer, *Whatever Happened to Worship?*, comp. and ed. Gerald B. Smith (Camp Hill, Pa.: Christian Publications, 1985), 37. [2]Alfred P. Gibbs, *Worship: The Christian's Highest Occupation*, 2d ed. (Kansas City, Kans.: Walterick Publishers, n.d.), 15. [3]Ibid., 15-17. [4]Rick Atchley, "What a Left-brained Preacher Has Learned," Part 1, *Pepperdine Lectures* (Malibu, Calif.: Pepperdine University Media Center, 1998), cassette. [5]Tozer, 51-52. [6]இந்தப் புத்தகத்தின் பிற்பகுதியில் உள்ள "என்னை நினைவுகூரும்படி" என்ற பாடத்தில் "கர்த்தருடைய நாளின் இராப்போஜனம்" என்ற பகுதியையும் "கர்த்தருடைய பந்தியை எத்தனை நாளுக்கு ஒருமுறை ஆசரிக்க வேண்டும்?" என்ற துணைப்பாடத்தையும் படிக்கவும். [7]டெக்சாஸின் லபாக் என்ற இடத்தைச் சேர்ந்த, கேரி வாக்கர் என்பவருடன் நான் மேற்கொண்டிருந்த உரையாடல் ஒன்றில், அவர் ''அன்பு'' என்ற அதிகாரமானது ஆராதனைமீதான விரிவான அறிவுறுத்தலின் மையப்பகுதியில் வருகிறது என்று சுட்டிக்காண்பித்தார். [8]Andy T. Ritchie Jr., Class Lecture Notes, The Worship of the Church, Harding University, n.d.